புலிப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை பிறப்பிப்பவர் - திருமதி. நிர்மலா அசோகன் அவர்கள்

ந.க.எண்: 1/2023/பு.ஊ.ம நாள்: 15.12.23

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - செங்கல்பட்டு மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - வீராபுரம் முதல் நிலை ஊராட்சி, பரனூர் கிராமம் புல எண். 76A/1A1 மற்றும் புலிப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி, ராஜகுளிப்பேட்டை கிராமம் புல எண்கள். 2/1A1, 1B1; 3/1A1A, 1A2A, 1A3A, 1A4A, 1B2A, 1B3A, 1B4A, 1B5A, 1B2A, 3, 4, 1C3A; 34B/1A1; 36/1A1A, 1B, 1C, 1D, 1E, 3, 4, 5, 6, 7; 39/1A1, 4A1; 41A/1A1A, 45, 1BIA; 42/1, 42/2; 43/1, 2; 44; 53/1, 2, 3 மொத்த பரப்பு 13.67 ஏக்கர் - மொத்த மனைகள் - 01 முதல் 140 அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக

பார்வை: 1) மனுதாரர் செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்கள் கடிதம் மற்றும் இணைப்புகள், நாள் : 30.12.2021

2) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் கடிதம் ந.க.எண்: 1716/2020/செ.மா3 , நாள்: 14.09.2023

3) தலைவர், புலிப்பாக்கம் ஊராட்சி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் தானப்பத்திர எண்: 5155/2022 நாள்: 11.04.2022 மற்றும் பரனூர் கிராமம், வீராபுரம் ஊராட்சி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் 5151/2022 நாள்: 11.04.2022

4) கருவூலத்தில் செலுத்தப்பட்ட நாள்: 15.07.2022.

****

ஆணை:-

பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம், அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் -1716/2020 செ.மா3, நாள்: 14.09.2023 படி செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் வீராபுரம் முதல் நிலை ஊராட்சி, பரனூர் கிராமம் புல எண்: 76A/1A1 மற்றும் புலிப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி, ராஜகுளிப்பேட்டை கிராமம் புல எண்கள்: 2/1A1, 1B1; 3/1A1A, 1A2A, 1A3A, 1A4A, 1B2A, 1B3A, 1B4A, 1B5A, 1B2A, 3, 4, 1C3A; 34B/1A1; 36/1A1A, 1B, 1C, 1D, 1E, 3, 4, 5, 6, 7; 39/1A1, 4A1; 41A/1A1A, 45, 1BIA; 42/1, 42/2; 43/1, 2; 44; 53/1, 2, 3 மொத்த பரப்பு 13.67 ஏக்கர் (அ) 55563.33 ச.மீ மொத்த மனைகள்:- 01 முதல் 140 வரை உள்ள குடியிருப்பு மனை பிரிவிற்கு **ம.வ/ந.ஊ.து.இ.(செ) எண்**:- **202/2023** என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவினை தலைவர் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார் அதனை ஏற்று செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம வீராபுரம் முதல் நிலை ஊராட்சி, பரனூர் கிராமம் புல எண். 76A/1A1 மற்றும் புலிப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி, ராஜகுளிப்பேட்டை கிராமம் புல எண்கள். 22/1A1, 1B1; 3/1A1A, 1A2A, 1A3A, 1A4A, 1B2A, 1B3A, 1B4A, 1B5A, 1B2A, 3, 4, 1C3A; 34B/1A1; 36/1A1A, 1B, 1C, 1D, 1E, 3, 4, 5, 6, 7; 39/1A1, 4A1; 41A/1A1A, 45, 1BIA; 42/1, 42/2; 43/1, 2; 44; 53/1, 2, 3 மொத்த பரப்பு 13.67 ஏக்கர் (அ) 55563.33 ச.மீ பரப்பளவு

இடத்தில் அனுமதி கட்டணம் மொத்தம் **ரூ.5,96,435/- (ரூபாய் ஐந்து லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நானூற்று முப்பத்தைந்து மட்டும்)** (DD No: 020476) புலிப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மன்றத்தில் செலுத்தியமைக்கான பலவகை இரசீஎண்: 8703 நாள்: 14.07.2022 - ல் செலுத்தப்பட்டத்தின் அடிப்படையில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்க **மவ / தலைவர் எண்: 01/2023-24** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:-

பார்வையில் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட கட்டிட மற்றும் மனைப்பிரிவு விதிகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் ந.க.எண் -1716/2020/செ.மா3, நாள்: 14.09.2023-ன் படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலததிற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள், சாக்கடை, வடிகால், துப்புரவு தெரு விளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. அங்கீரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது, கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து எந்த கட்டிடமோ சுவரோ மேற்படாது கற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ கவரோ கட்டக்கூடாது.
6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு மல அறை, எருகுழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்று குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றின் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
7. மனையின் பரப்பில் 50 சதவீதத்திற்கு மேற் கட்டிடம் கட்டக்கூடாது.

8. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகை பத்திரம்பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
9. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
10. கடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமான தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள் கழனி ஏற்படுத்தக் கூடாது.
11. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
12. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
13. தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6"அடி × 4" அடி என்ற அளவுக்கு குறையாமல் காங்கிரிட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
15. புலிப்பாக்கம் ஊராட்சி தீர்மானம் எண்:- ....., நாள்:- .....

தலைவர்
33. புலிப்பாக்கம் ஊராட்சி
திருமதி. நிர்மலா அசோகன்,
புலிப்பாக்கம் முதல் நிலை ஊராட்சி
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்

இணைப்பு:- மனைப்பிரிவு வரைபடம்.

பெறுநர்

செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்,
கே.கே நகர் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
சி-48, அண்ணா நகர், சென்னை-40.

நகல்

உதவி இயக்குனர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு துறை,
செங்கல்பட்டு.